மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கடலை ஆராய்ச்சி நிலையத்தை பொள்ளாச்சி பகுதியிலே வைக்க வேண்டும் என்பதற்குண்டான நடவடிக்கை கள எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறறது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்.

கவன ஈர்ப்பு அறிவிப்பு எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து.

திரு. துரை முத்துசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர் நான் 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 2-ம் நாள் அன்று 41-வது விதியின் கீழ். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங் கள். அறையிலே வந்து பேசுங்கள்.

திரு. துரை முத்துசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர், நான் கொடுத்த வது 41 அறிக்கையிலே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையிலே எழுப்புவது முறையாக இருக்காது. அறையில் வந்து பேசுங்கள்.

நீங்கள் படிக்கும்பொழுதே நான் புரிந்து கொண்டேன். இதையே நீங்கள் கடைபிடித்தால் அவையில் மரபு இருக்காது. இந்த அவையிலே வேண்டாம். அறையிலே வந்து சொல்லுங்கள். 41-வது விதியின் கீழ் வரவில்லை என்று தானே கேட்கப் போகி றீர்கள்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிற கருத்தைக் கொஞ்சம் கேளுங்கள். நான் கேட்ட போது மானியக் கோரிக்கையிலே பேசலாம் என்று சொன்னீர்கள். 7-ம் தேதி கால்நடை மானியம் முடிந்து விட்டது ஆனால் எனக்கு அந்தக் கடிதம் 8-ந் தேதி தான் வருகிறது. ஆனால் கல்வி மானியத்தன்று, இப்படிப்பட்ட 41-வது விதி எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது, இது சரிதானா என்று கேட்கிறேன்.

1978 மார்ச்சு 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய முடிவுதான் இறுதியானது. அது சரிதானு, தவறு என்று தாங்கள் கேட்க முடியாது. அனுமதித்திருக்கலாம் அல்லது மற்றதையும் பார்த்து நான் செய்திருக்கலாம்.

திரு. துரை முத்துசாமி: 41-வது விதியின் கீழ் நீங்கள் கொடுத்த தீர்பபு சரிதானு என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரிதான் நான் சொல்வது தான் தீர்ப்பு இதற்கு மேலே ஒன்றும் இல்லை.

திரு. துரை முத்துசாமி: 7-ந் தேதி மானியம் முடிந்து விட்டது. 8-ம் தேதி எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்வது, இலாகாவின் கவனக் குறைவால் இருக்கலாம். 7-ம் தேதியே மானியம் முடிந்து விட்டது.

திரு. நா. சுந்தரராஜ்: பாயின்ட் ஆப் ஆர்டர்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அத்தனைக்கும் பாயின்ட் ஆப் ஆர்டர் அனுமதிப்பதால்தான் இந்தப் பிரச்னை வருகிறது. நீங்கள் உட்காருங்கள் என்னுடைய பிசினசை முடித்து விடுகிறேன்.

திரு. ஏ. செல்லப்பன்: பாயின்ட் ஆப் ஆர்டர்... 41-வது விதியின் கீழ்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள் நான் நிற்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

(3) கவன ஈர்ப்பு.

ஏற்றுமதி செய்யும் பருத்தித் துணியின் அளவினை நிர்ணயித்து பிறப்பிக்கப்பட்ட ஆணையும், அதன் விளைவுகளும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, 1978-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 14-ம தேதியிடப் பெற்ற வர்த்தகக் கட்டுப்பாட்டு ஆணையின்படி பருத்தித் துணிகள் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் ஏற்றுமதி செய்யும் அளவினை நிர்ணயம் செய்துள்ளதன்